# செங்கோல்: மக்கள் ஆட்சியின் அடையாளமா? மன்னர் ஆட்சியின் மனோபாவமா?

**2023** ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் தேதி புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறக்கப்பட்டது. அப்போது நாடாளுமன்ற மக்களவையில் சபாநாயகரின் வலப்புறத்தில் ஒரு கண்ணாடி பேழையில் செங்கோல் வைக்கப்பட்டது. அதைப் பற்றிய ‘வரலாறு’ அன்று பேசப்பட்டு அவை நாளேடுகளில் வெளிவந்தன. அது குறித்து கடுமையான விமர்சனங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஆனால் இப்போது செங்கோல் விவாதம் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்திருக்கிறது. செங்கோல் மற்றொரு காட்சியை வழங்கத் தொடங்கிவிட்டது. அதனால் மீண்டும் எதிர்க்கட்சிகள் ஒன்றிய அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து குரல் கொடுத்தனர்.

18ஆவது நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் ஜூன் 27ஆம் தேதி குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்ற வந்தார். அவருக்கு மக்களவை மார்ஷல் செங்கோல் ஏந்தி வரவேற்பு அளித்தார். குடியரசுத் தலைவர் சபாநாயகரின் இருக்கைக்குச் சென்றதும் மக்களவைச் செயலாளரின் இருக்கைக்கு அருகே செங்கோல் வைக்கப்பட்டது. இனி, இந்நிகழ்வு குடியரசுத் தலைவரை ஆண்டுதோறும் வழக்கமாகப் பின்பற்றப்படும் வரவேற்பு மரபாக உருவாக்கப்பட்டுவிட்டது, இதைத் தொடரவிடக் கூடாது; ஜனநாயகத்திற்கு எதிரானது என்பதால்!

செங்கோலை நாடாளுமன்றத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் இந்திய அரசியல் சாசனப் புத்தகத்தை அதற்குப் பதிலாக வைக்கலாம் என்று சமாஜ்வாடிக் கட்சியின் எம்.பி. ஆர்.கே. சவுத்திரி தனது கருத்தாக எடுத்து வைத்தார். இது குறித்த கடிதமும் தற்காலிக சபாநாயகர் பருத்ருஹரி மகதாப்புக்கு எழுதினார். அதில் அவர், **“பிரதமர் மோடி கடந்த ஆண்டு புதிய நாடாளுமன்றத்தில், வைக்கப்பட்ட செங்கோல் ‘முடியாட்சியின் அடையாளம்; அது ஜனநாயகத்தின் அடையாளம் அல்ல”** என்று குறிப்பிட்டு இருந்தார்.

‘இந்தியா’ கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளான தி.மு.க., காங்கிரஸ், ராஷ்ட்டீரிய ஜனதா தளம் ஆகியன சமாஜ்வாடிக் கட்சி எம்.பி.யின் கருத்துக்கு ஆதரவைத் தெரிவித்தன. ஆர்.கே. சவுத்திரி மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கும் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதம் தற்காலிக சபாநாயகர் பருத்துருஹரிக்கு எழுதியதைவிட நன்றாக, விரிவாக இருக்கிறது. அதில், அவர், **“நம் நாட்டில் ஜனநாயகம் தழைப்பதாகக் காட்ட வேண்டுமெனில் செங்கோல் அகற்றப்பட வேண்டும். ஏனெனில் இந்தியாவில் ஜனநாயகம்தான் உள்ளதே தவிர, முடியாட்சி அல்ல, செங்கோல் என்பது அக்கால ராஜாக்களின் தண்டம் ஆகும். தர்பாரில் அமரும் அரசர்கள் தங்கள் கைத்தடியாக இந்தச் செங்கோலைக் கையில் வைத்துக் கொண்டு அமர்ந்தனர். இதை வைத்துக் கொண்டு அவர் எதுவும் உத்தரவிட்டால் இட்டதுதான். இப்போது இந்தியாவில் அரசியல் சாசனத்தீன் கீழ் ஆட்சி உள்ளது. இங்கு ஜனநாயகமும் உள்ளதை மறந்துவிடக் கூடாது”** என்று எழுதியிருந்தார்.

டி.கே.எஸ்.இளங்கோவனும், தயாநிதி மாறனும் செங்கோலுக்கான எதிர்ப்புக் கருத்தினைத் தெரிவித்து இருக்கிறார்கள், உடனே பா.ஜ.க., தி.மு.க. தலைவரின் கருத்து இதில் என்ன என்று கேட்கிறது. தி.மு.க.வை அதன் எதிரிகள் கொள்கை நடைமுறைகளில் மிகச் சரியாகக் கவனம் கொள்ள வேண்டும் என்பதுவே நமது ஆசை. புதிய நாடாளுமன்றம் திறக்கப்பட்ட மறுநாள் - 28.05.2023 இல் வெளியான ‘முரசொலி’ - அறிஞர் அண்ணா 24.08.1947 தேதியிட்ட தமது ‘திராவிட நாடு வார ஏட்டில் அவர் எழுதிய கட்டுரையை மறுவெளியீடு செய்து இருந்தது. அதற்கு **‘நேருவுக்கு அளித்த செங்கோல்’** குறித்து விளக்கம் என ‘முரசொலி’ தலைப்பிட்டு இருந்தது. அதில் அண்ணா செங்கோலை வரவேற்று எழுதவில்லை. புதிய இந்தியாவிற்கான வெளிச்சத்தை **“இந்தச் செங்கோல்’ தரும் என்று குறிப்பிடவில்லை. அந்தக் கட்டுரையின் இறுதியில், இந்தக் கோல் கொடுத்ததன் மூலம், தமக்கும் புதிய சர்க்காருக்கும், சிநேகம் இருப்பதாக காட்டி மேலும் பாமரரை மயக்க விரும்புகிறார், ஆதீனம். நேரு சர்க்காரின் நேயரான ஆதீனம் ஏற்கெனவே சிவநேசத்தையும் பெற்று இருக்கிறது. எனவே அதன் ஆதிக்கம் குறையாது, குன்றாது, என்று பாமரர் நம்ப இடம் ஏற்படுகிறது”** - எனக் குறிப்பிட்டு இருக்கிறார், இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம்?

இங்கே மதம் அதன் இடத்தை வகிக்கிறது, அரசை தன் சார்பாக்கிக் கொள்ள முனைகிறது. மதச்சார்பின்மைக்கு எதிராக இருக்கிறது. பிற மதங்கள் உள்ளதை மறுக்கிறது. அரசு உத்தரவுபடி செங்கோல் வழங்கப்பட்டாலும் அது இந்த ஆட்சியின் அடையாளம் ஆகிவிட முடியாது. அது ஒரு தெய்வீக ஆசீர்வாதத்தைப் போன்ற ஒரு நிறைவை ஆலோசனை கூறியவர்களுக்கு ஒருவேளை வழங்கி இருக்கலாம் என்பதுவே, மேலும் அவர்கள் விரும்பியதைப் போல அதிகார மாற்றத்திற்கான ஓர் அடையாளம் செங்கோல்; அதுவும் சுதந்திரத்தின் போது ஒரு மய்யப் பாத்திரத்தை வகித்து இருக்கிறது. அறிஞர் அண்ணா, செங்கோல் வழங்கியது மக்களுக்காக அல்ல, ஜனநாயகத்திற்காக அல்ல, ஆதீன அடையாளத்தை அரசிடம் காட்டிக் கொள்ள என்று கூறுகிறார். இது அண்ணாவின் எதிர்ப்பை செங்கோல் வழங்கியமைக்கு காட்டியது ஆகும். இதை ‘முரசொலி’ வெளியிட்டு இருக்கிறது என்றால் தி.மு.க.வின் கருத்தும் ஸ்டாலினின் கருத்தும் அதுவே என்பதுதான். பா.ஜ.க. ஸ்டாலின் கருத்து இதில் என்ன என்று கேட்பது நமக்கு வியப்பளிக்கிறது. இந்தச் செங்கோல் உருவான வரலாறு எதுவென்று கூறப்படுகிறது.?

“இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவது என இங்கிலாந்து அரசு முடிவு செய்ததும், அதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வந்தன. அப்போது இந்தியாவில் ஆங்கிலேய அரசின் கடைசி வைஸ்ராயாக இருந்த மவுண்ட் பேட்டன் பிரபு, “எங்களிடம் இருந்து இந்தியாவுக்கு அதிகார மாற்றம் நடந்ததை எந்த வகையில் அடையாளம் காட்டுவது?” என்று ஜவஹர்லால் நேருவிடம் கேட்டார்.

உடனே நேரு இது குறித்து மூதறிஞர் ராஜாஜியிடம் கேட்க, அதற்கு அவர், தமிழ்நாட்டில் முன்பு மன்னர்களிடம் ஆட்சி மாற்றம் நிகழும் போது, ராஜகுருவிடம் இருந்து செங்கோல் பெறும் மரபு இருந்ததை சுட்டிக்காட்டி அந்த நடைமுறையை கையாளலாம் என்று கூறினார். அந்த யோசனை சரியாக இருந்ததால்,நேரு அதை ஏற்றுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து தமிழகத்தில் செங்கோல் தயாரிக்கப்பட்டது. திருவாவடுதுறை ஆதீனம் ஏற்பாட்டின்படி சென்னையில் உள்ள ஒரு பிரபல நகைக்கடை, வெள்ளியில் தங்க முலாம் பூசப்பட்ட வேலைப்பாடு மிக்க நந்தி உருவத்துடன் கூடிய ரூ.15 ஆயிரம் மதிப்புள்ள 5 அடி உயர செங்கோலைத் தயாரித்தது. பின்னர் அந்தச் செங்கோல் டெல்லி கொண்டு செல்லப்பட்டது.

இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ந் தேதி தொடங்குவதற்கு சற்று முன் அதாவது இரவு 11.45 மணி அளவில் சுதந்திரம் பெறுவதற்கான நிகழ்வு டாக்டர் ராஜேந்திர பிரசாத் முன்னிலையில் நடைபெற்றது. இதில் நேரு, இராஜாஜி, சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அப்போது திருஞானசம்பந்தர் அருளிய கோளறு பதிகத்தின் 11 பாடல்களையும் ஓதுவாமூர்த்திகள் பாடி முடித்ததும். திருவாவடுதுறை ஆதீனம் குமாரசாமி தம்பிரான் மவுண்ட் பேட்டன் பிரபுவிடம் இருந்து அந்த செங்கோலை வாங்கி புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்க இருக்கும் நேருவிடம் வழங்கினார். அப்போது திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் நாதஸ்வர இசை முழங்க நேருவுக்கு திருநீற்று பிரசாதம் வழங்கி சந்தன மாலை அணிவிக்கப்பட்டது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு விடுதலை அளித்ததன் அடையாளமாக வழங்கப்பட்ட அந்தச் செங்கோல் உத்தரப்பிரதேச மாநிலம் அலகாபாத்தில் உள்ள அருங்காட்சியகத்தில், நேரு பரிசாகப் பெற்ற மற்ற பொருட்களுடன் வைக்கப்பட்டு இருந்தது. அதைத்தான் இன்று நடைபெறும் விழாவில் தமிழக ஆதீனகர்த்தர்களிடம் இருந்து பிரதமர் மோடி பெற்றுக் கொள்கிறார்”

**’ தினத்தந்தி’ (28.05.2023)**

நேரு பரிசாகப் பெற்ற செங்கோல் அவர் பெற்ற இதர பரிசுப் பொருள் களுடன் அருங்காட்சியகத்தில் இடம் பெற்றது. அருங்காட்சியகத்தில் இடம் பெற்ற செங்கோலின் மீது ‘பொன்னால் செய்யப்பட்ட கைத்தடி பண்டிட் ஜவகர்லால் நேருவுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது’ என்று தவறுதலாக குறிப்பு எழுதி வைத்துவிட்டனர். செங்கோல் என்பது பற்றி அருங்காட்சியகத்தில் இருந்தோர் அறியாமல் செய்த பிழை இது.

**நேருவுக்கு வழங்கப்பட்ட செங்கோலை அவர் நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் இருக்கையின் பக்கத்தில் பேழையில் வைக்கவில்லை. மாறாக அருங்காட்சியகத்திற்கு அனுப்பினார். அவர் வரலாற்றறிஞர். ஜனநாயகப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குரிய நாடாளுமன்றத்தில் மன்னராட்சியின் அதிகாரத்தின் அடையாளமாகத் திகழ்ந்த செங்கோலை இடம் பெறச் செய்யக் கூடாது என்பதை நன்கு அறிந்தவர் நேரு. ஆகவே அவர் செங்கோலை நாடாளுமன்றத்தில் வைக்கவில்லை. ஆனால் பிரதமர் மோடியை நேருவோடு எந்த வகையிலும் இணைத்துப் பார்த்துவிட முடியாது.**

மோடி, பிரதமர் ஆனதிலிருந்து அவரும் அவரது கட்சியும் கட்சியினரும் வைக்கும் முழக்கங்களையும் நடவடிக்கைகளையும் சற்று நினைவு படுத்தி பாருங்கள்.



**க. திருநாவுக்கரசு**
**திராவிட இயக்க ஆய்வாளர்**

**“அகண்ட பாரதத்தை அமைப்போம்.”**

**“அரசியல் சட்டத்தை மாற்றுவோம்”**

**“கீதையை தேசிய நூலாக அறிவிப்போம்.”**

**“மாநிலங்களை அகற்றுவோம்”**

**“சிறுபான்மையினரை மதியோம்”**

**“வடமதுரையிலும் வாரணாசியிலும் மசூதிகளை இடிப்போம்”**

**“மதச்சார்பின்மையை ஏற்கமாட்டோம்”**

**“தொழிலாளர்களை வதைப்போம்”**

**“விவசாயிகளைக் கருத்தில் கொள்ளோம்”**

**“ஜனநாயகத்தை வேரடி சாய்ப்போம்”**

**“போலி மதக் கருத்துகளை வளர்ப்போம்”**

**“சமஸ்கிருதத்தைப் போற்றுவோம்”**

**“இந்தியைத் திணிப்போம்”**

என இப்படி முழக்கங்களும் அவர்களது செயல்பாடுகளும் இருந்து வருகின்றன. இன்னும் மோசமான வசைகளும் கும்பலாகச் சென்று தாக்குவதும் கொலை புரிவதும் அவர்களது கலை. பரப்புரையின் போது மூட்டை மூட்டையாகப் பொய்களை அவிழ்ப்பார்கள். கட்சி மாறிகளை ஊக்குவிப்பார்கள். கல்விக் கொள்கைகளில் பழமையைப் புகுத்துவார்கள். எதை அவர்கள் செய்தாலும் ‘நாடு தழுவி’ மாபெரும் சத்தத்தை உருவாக்கி விடுவார்கள். உலகம் முழுவதும் ஒரு தத்துவத்திற்கு அனைவரும் ஏற்றுக் கொள்கிற பொருள் ஒன்று இருக்க இவர்கள் புதிய கோணத்தில் வேறொன்றைச் சொல்லி குழப்புவார்கள். மொத்தத்தில் அவர்களுக்கு குழப்புவதற்கு ஏதாவது இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

இந்த மகாநுபாவர்களுக்கு சுதந்திரம் ஆங்கிலேயர் வழங்கப்பட்ட நாளன்று நேருவுக்கு கொடுத்த செங்கோல் பற்றிய ஆலோசனையைக் கூறி நினைவு படுத்தி இருக்கிறார்கள். அதுவும் ஆலோசனையைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த பரதத்தை ஆராய்ச்சி செய்து டாக்டரான பெண்மணி வழங்கியதாகச் செய்திகள் வெளியாயிற்று. அதன் தொடர்ச்சியாக புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்புக்கு இந்தச் செங்கோலை மோடி கையில் எடுத்துக் கொண்டார். நேரு கையால் தொட்டதை இவர் கையால் தொடுவார் போலிருக்கிறது. நேருவின் இதர செயல்களை மட்டும் எதிர்ப்பார். செங்கோலை புதிய நாடாளுமன்ற விழாவுக்கு எத்தகைய ‘திரைக்கதை அம்சத்தோடு காட்சி அமைக்க வேண்டும் என்பதை மோடி குழுவினர் தயார் செய்து விட்டனர். புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் அந்தச் செங்கோலை வைக்க முடிவும் செய்துவிட்டனர். சென்னையில் உம்மிடி பங்காரு செட்டி கம்பெனி இந்தச் செங்கோலை தயாரித்தவர்கள் என்பதையும் ஆய்ந்தறிந்தனர்.

புதிய நாடாளுமன்றக் கட்டட திறப்பு விழாவுக்கு பங்கேற்கவும் மோடியை வாழ்த்தவும் 21 ஆதீனங்கள் டெல்லிக்குப் பறந்தனர். ஆனந்தபவன அருங்காட்சியகத்திலிருந்து ‘செங்கோல்’ எடுத்துவரப் பெற்றது. இது ஒரு வித்தியாசமான ‘Replay வாகும். அருங்காட்சியகத்திலிருந்து கொண்டு வந்த செங்கோலை மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஹரிகர ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் வழங்க பிரதமர் மோடி பெற்றுக் கொண்டார். இது போல திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீஅம்பலவாண தேசிக பரமசாரிய சுவாமிகள் செங்கோல் வழங்கிய ஒளிப்படமும் ஒரு நாளேட்டில் முதல் பக்கத்தில் வெளியாயிற்று. இது புதிய செங்கோலா? அருங்காட்சியகத்துதா? அப்படியானால் மதுரையார் வழங்கியது எது? அல்லது இரண்டும் ஒன்றா? என்பது நமக்குத் தெரியவில்லை.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் செங்கோல் நிறுவப்படுவதற்கு முன்பாக அதற்கு ஆதீனங்கள் மற்றும் சிவனடியார்கள் பூசை செய்தனர். அப்போது செங்கோல் முன்பு பிரதமர் மோடி விழுந்து வணங்கினார். சுதாசேஷையன் ‘தினமணியிலும் *இந்து தமிழ் திசையிலும் செங்கோலைப் பற்றி ஆய்வுக் கட்டுரைகளைத் தன் திறமையெல்லாம் காட்டி எழுதியிருந்தார். இதையெல்லாம் கவனித்த ராகுல், மோடி முடிசூட்டு விழா நடத்துகிறார் என்று விமர்சனம் செய்தார். இவ்விதமெல்லாம் செங்கோல் டெல்லி பட்டணத்தில் வலம் வந்து சபாநாயகருக்கு அருகே வைக்கப்பட்டுவிட்டது. அப்படி வைக்கப்பட்ட செங்கோல் பிரதமர் மோடியின் மூன்றாவது அவதாரத்து ஆக்கினையால் ஜூன் 27 ஆம் தேதி பேழையிலிருந்து இறங்கியது. மக்களவை மார்ஷல் கரங்களில் தவழ்ந்தது. குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்திற்கு உரையாற்ற வருகை தந்த போது மார்ஷல் செங்கோலை ஏந்தி வர குடியரசுத் தலைவர் பின்னே வந்தார். அரச வரவேற்பு வழங்கப்பட்டுவிட்டது. முதல் காட்சியில் பேழையில் வைக்கப்பட்ட செங்கோல் இரண்டாம் காட்சியில் பேழையை விட்டு இறங்கி குடியரசுத் தலைவருக்கு வரவேற்பு தெரிவித்தது. முதல் காட்சியில் செங்கோலை வணங்கிய மோடி இரண்டாம் காட்சியில் முர்முவை வரவேற்றபோது செங்கோலை வணங்கவில்லை. இப்போது அவர் ‘அவதாரபுருஷர்’ ஆகிவிட்டார். இனி, ஆண்டுதோறும் இந்த செங்கோல் ‘வைபவம்’ நடக்கும் என்று திடமாக நம்பலாம். இப்படித் தொடருவதை அனுமதிக்கக் கூடாது. இது மன்னர் கால மனோபாவமாகும். நாம் மக்களாட்சியின் மாண்பை - ஜனநாயகத்தின் மேன்மையினை வெளிப்படுத்த வேண்டும் என்றே விரும்புகின்றோம்.

**‘இந்தியா’ கூட்டணிக் கட்சியினர் செங்கோலை நாடாளுமன்றத்திலிருந்து அகற்ற வேண்டும். அந்த இடத்திலே அரசியல் சாசன புத்தகத்தை வைக்க வேண்டும் என்று கோரிக்கை எழுப்பி இருக்கின்றனர். இது நியாயமான கோரிக்கை. சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் ஆங்கிலேயரிடமிருந்து அதிகாரமாற்றத்திற்கான ஓர் அடையாளமாக, கொடுப்பது - வாங்குவது போன்ற நிகழ்விற்காக வழங்கப்பட்ட ஒரு ஆலோசனையைச் செயல்படுத்தி இருக்கிறார்கள். இதைத் தவிர இந்தச் செங்கோலுக்கு வேறு பொருள் இது ஜனநாயகத்தையோ மக்களாட்சியையோ இல்லை. பிரதிநிதித்துவப்படுத்துவது ஆகாது.**

**மன்னர்கள் செங்கோலை தனது சுயேட்சையான அதிகாரத்தின் அடையாளமாகக் கருதினர். மரபு வழியாகவும் பயன்படுத்தினர். மக்களாட்சியில் ஜனநாயகத்தில் அப்படிக் கருதுவது பொருந்தாது. மேலும் குடியரசுத் தலைவரை செங்கோல் முன்னெடுத்துச் செல்ல வரவேற்பது மாமன்னரை அந்தக் காலத்தில் வரவேற்பது போல உள்ளது. குடியரசின் முதல்வரை முந்தைய மரபு படியே வரவேற்க வேண்டும். ஆனால் இப்போது நிகழ்ந்த வரவேற்பு கடவுளின் அவதாரம் மாமன்னர் என்ற பழங்கால கூற்றை மெய்யாக்குவதாய் இருக்கிறது. ஆகவே இத்தகைய பழமையாளர்களின் போக்கை எதிர்ப்பதில் தி.மு.க.வும் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளோடு இணைந்தே இருக்கிறது; எதிர்க்கிறது. ஒன்றிய அரசு நாடாளுமன்றத்திலிருந்து செங்கோலை அகற்றி அருங்காட்சியகத்தில் சேர்ப்பிப்பதே இந்திய ஜனநாயகத்தையும் குடியரசையும் போற்றுவதற்குரிய சிறந்த நடவடிக்கைகள் ஆகும். காலம் இதனைச் செய்யும்.**

●